# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. (கூட்.) 7/2008

### சமோதா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"சமோதா மன்றம்" என்றழைக்கப்படுவதும், அறியப்படுவது மான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதுவரை காலமும் தாபிக்கப்பட்டிருந்ததாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 76 ஆம் இலக்க, சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சமோதா மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சமோதா மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சமோதா மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ்இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பது

டன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்து வமும்அதிகாரமும் கொண்டதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தேவையுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் ;

(ஆ) இக்கட்டான நிதி மற்றும் பொருளளவிலான கஷ்டங்களி டையே கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல் ;

(இ) விதைகள், பசளை, விவசாய உபகரணங்கள் வழங்குவ துடன் விவசாயத்தையும் கால்நடையையும் அபிவிருத்தி செய்தலும் ; அத்துடன்

(ஈ) வீட்டு வசதி இல்லாதோருக்கு தமது வீடுகளை அமைத் துக் கொள்வதற்கு உதவுதலும் கடனுதவி அந்நோக்கத் திற்கென பெற உதவுதலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4**. (1) கூட்டுத்தாபனத்தின அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், பிரதித்தவிசாளர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், பிரதான அமைப்பாளர் மற்றும் ஒரு உறுப்பின ரைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு நேர் முந்திய நாளன்று மன்றத்தில் பணிப்பாளர் சபையில் பதவி வகித்தவர் களும், கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையா தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, வங்கிக் கணக்குகளைத்

தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதியங்களை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்த அவசியமான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலைநீக்கஞ் செய்தல் மற்றும் வேறு ஏதேனும் செயல்களை புரியவும் கூட்டுத்தாபனம் கொண்டதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகுப்பினரையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் ;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், பதவி விலகல் அல்லது பதவி வறிதாதல் அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் அத்துடன் அவர்களது தத்துவங்கள், நடத்தை, கடமைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையும், கூட்டத்தை நடாத்துதல் கூட்டநடப்பெண், அதில் அலுவல்களை நடாத்துதல் என்பவற்றில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் உறுப்பாண்மைக்கான தகைமையும், தகைமையீனமும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகள், அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான தனிசுகள்.*

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்குக் கிடைக்கப் பெறவேண்டிய எல்லாத் தனிசுகளும், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப் படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது.*

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்ற வகையாக அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், ஆதனங்களை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகைக்குக் கொடுக்கவும், கொடுத்துமாற்றவும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற

வகையாகப் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர்

ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினையை எந்தவொரு சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனுமாள் கையொப்பமிடுதவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

*கலைக்கப் பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டபின்னர் எத்தன்மைத்தான ஆதனமெதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளித்தல் ஆகாது. ஆனால் அது இக்கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும், அதன் அல்லது அவற்றின் விதிகள் காரணமாக ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டதுமான அல்லது தடை செய்யப்பட்டிருக்கின்றனவுமான வேறு ஏதேனும் நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் கலைப்புக்கு உடன்முன்னர் அல்லது கலைப்பின் போது கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் மக்கட் குழு அல்லது கூட்டுத்தாபனத்தின உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*